# திருப்பத்தூர் நகராட்சி

2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31.08.2023–ம் நாள் வியாழக் கிழமை காலை 10.00 மணிக்கு திருப்பத்தூர் நகராட்சி அலுவலக நகரமன்ற கூடத்தில் நகரமன்றத் தலைவர் அவர்களால் நடத்தப்பட உள்ள சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்கள்

**328.** நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றத் தலைவர்கள், நகரமன்ற துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, அரசாணை (நிலை) எண்.98, நாள்.13.07.2023–ன்படி ஜூலை 2023 மாதம் முதல் மதிப்பூதியம் கீழ்கண்ட விவரப்படி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| நகர்மன்றத் தலைவர் | ரூ.15,000/– |
| நகர்மன்ற துணைத் தலைவர் | ரூ.10,000/– |
| நகர்மன்ற உறுப்பினர் | ரூ. 5,000/– |

வரப்பெற்ற அரசு ஆணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.305/2022/இ1)**

**தீர்மானம் எண்.328, நாள்.31.08.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**329.** திருப்பத்தூர் நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022–2023ன் நிதியின் கீழ் 14.07.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**1.** Providing cement concrete pavement road & construction of storm water drain pillaiyar kovil road 03304 R077 in Ward No.04 Thirupathur Municipality

| வரிசை எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1. | திரு.S.ரவி<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| 2. | திரு.K.மூர்த்தி<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.92% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.S.ரவி அவர்களுக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கு சமர்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1057/2023/இ1

**தீர்மானம் எண்.329, நாள்.31.08.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**330**. இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் இயங்கிக் கொண்டு வரும் ஈப்பு வண்டி எண்.TN83MB5085–க்கு ஆயில் சர்வீஸ் மற்றும் இதர பழுதுகளை சரி செய்யும் பணிக்கு தோராய செலவினம் ரூ.35,000/– மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தலைவர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மானம் எண்.330, நாள்.31.08.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**331.** அரசாணை (நிலை) எண் 125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 08.09.2011–ல் திருப்பத்தூர் நகராட்சி எல்லை ஒட்டி இருந்த திருப்பத்தூர் கிராமம் இணைத்து எல்லை விரிவாக்கம் செய்து அரசின் ஒப்பதல் அளிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து திருப்பத்தூர் நகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகள் சேர்த்து 36 வார்டுகளாக பிரித்து வார்டு எல்லை மறுவறையறை செய்து நிர்வகிக்கப்பட்டு வருகிறது. திருப்பத்தூர் கிராம பகுதி திருப்பத்தூர் நகராட்சியுடன் இணைக்கப்பட்ட பின்பும் திருப்பத்தூர் கிராம பகுதியில் இருந்து வந்த ஊராட்சிக்கு சொந்தமானதாக இருந்து வந்த சொத்துக்கள் விவரம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களால் இந்நகராட்சிக்கு தெரிவிக்கப்படாமலும், முறைப்படி ஒப்படைப்பு செய்யப்படாமலும் இருந்து வந்தது. இதனால் திருப்பத்தூர் நகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதிக்கு இந்நகராட்சியால் முழுமையாக அடிப்படை வசதிகள் செய்து தருவதில் இடையூறுகள் இருந்து வருகிறது. இதனை கருதி இது குறித்து திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களுக்கு பல்வேறு கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்த நிலையில் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் ந.க.அ8/1691/2020, நாள்:03.07.2023–ல் கீழ்கண்ட பள்ளிகள் இந்நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. இவ்விவரம் நகர மன்றத்தின் பார்வைக்கும், வருங்காலங்களில் இப்பள்ளிகளை இந்நகராட்சி பராமரித்து வர மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பள்ளிகள் விவரம் | பள்ளிகள் அமைந்துள்ள பகுதி | பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி (வார்டு எண் 32) | வேலன் நகர் | 100 |
| 2 | ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி (வார்டு எண் 15) | வள்ளுவர் நகர் | 26 |
| 3 | ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி (வார்டு எண் 31) | அவ்வை நகர் | 20 |
| 4 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி (வார்டு எண் 36) | திருமால் நகர் | 164 |

<u>அலுவலக குறிப்பு</u> :

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1192/2022/எப்1

**தீர்மானம் எண்.331, நாள்.31.08.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**332.** அரசாணை எண்.467 நாள் 22.09.2009 இல் தனியாருக்கு வாகன முன்பணம் அனுமதிப்பதற்கு ரூ.6500/ அதற்கு மேல் அடிப்படை ஊதியம் பெற வேண்டும் என்ற நிபந்தனை மாற்றம் செய்து முறையான ஊதிய விகிதம் பெறும் அனைத்து அரசு அலுவலர்களும் இம்முன் பணத்தை பெற அனுமதிக்கப்பட்டுள்ளது. வாகன விலை அல்லது ரூ.50000/-இதில் எது குறைவோ அந்த தொகையை முன்பணமாக பெற அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் 05.08.2013-ம் தேதி முதல் அலுவலக உதவியாளராகவும், 11.07.2018 முதல் பதிவறை எழுத்தராகவும் பணியாற்றி வரும் திரு.கே.மாரிமுத்து அவர்கள் இந்நாள் வரை எந்தவித வாகன முன்பணம் பெறாத நிலையில் மேற்படி பணியாளருக்கு சொந்த பயன்பாட்டிற்கு வாகன முன்பணம் ரூ.50000/-ஐ 2023-2024-ம் ஆண்டின் வருவாய் நிதியில் இருந்து வழங்கலாம். மேற்படி முன்பணத், தொகையினை 50-சம தவணைகளில் சம்மந்தப்பட்ட பணியாளரின் ஊதியத்தில் இருந்து பிரதி மாதம் பிடித்தம் செய்யவும், அசல் முடிந்த பின்னர் வட்டி கணக்கீட்டு பிடித்தம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.0442/2023/பி1**
**தீர்மானம் எண்.332, நாள்.31.08.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**333**. திருப்பத்தூர் நகராட்சியின் 2022-2023 ஆம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3139/2015/சி1)**

**தீர்மானம் எண்.333, நாள்.31.08.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**334.** திருப்பத்தூர் நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள நாளொன்றுக்கு சராசரியாக 100 கிலோவிற்கு அதிக அளவுள்ள திடக்கழிவுகள் உருவாகக் கூடிய கட்டிடங்களை பயன்படுத்தும் மத்திய அரசுத்துறை நிறுவனங்கள், மாநில அரசுத்துறை நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், மருத்துவமனைகள், மருத்துவ சிகிச்சை நிலையங்கள், பள்ளிகள், கல்லூரிகள், இதர கல்வி நிறுவனங்கள், மாணவர் விடுதிகள், வர்த்தக (ஷாப்பிங்) மால்கள், வழிபாட்டுத்தலங்கள், விளையாட்டு அரங்குகள், விளையாட்டு வளாகங்கள், துணி விற்பனையகங்கள், உணவு விடுதிகள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சந்தை ஒப்பந்தம் எடுத்தோர் ஆகியோர் அதிக கழிவுகளை உருவாக்குபவர்கள் (Bulk Waste Generator) தங்கள் வளாகத்திற்குள் உருவாகும் கழிவுகளை மறு சுழற்சி செய்வதற்கு ஏற்ப உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள தெரிவித்து திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன்படி வழங்கும் அறிவிக்கையினை மதுரை மணி நாளிதழில் 29.06.2023 அன்று விளம்பரம் செய்தமைக்கு பட்டியல் தொகை ரூ.21,504/-ஐ வழங்க கோரப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்திற்கு தொகை வழங்க பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.486/2017/எச்1)**

**தீர்மானம் எண்.334, நாள்.31.08.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**335.** திருப்பத்தூர் நகராட்சி பகுதிகளில் பொது சுகாதாரப் பணிகளின் அவசியம் கருதி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இரண்டு ஒப்பந்த ஓட்டுநர்கள் பணியமர்த்தி ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்படும் தினக்கூலி அடிப்படையில் நகரமன்ற அனுமதி பெற்று பணிபுரிந்து வருகின்றனர். தற்போது திரு.N.ஜெயராமன் என்பவர் நிரந்தர பணி நியமனம் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதால், இந்நகராட்சி மூலம் சென்னை உயர்நீதிமன்ற அரசு

வழக்கறிஞர் அவர்களுக்கு சட்ட கருத்துரு பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு தெளிவுரை வழங்க கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தெளிவுரை பெறும் வரை பொது சுகாதாரப் பணிகளின் அவசியம் கருதி, நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்த ஓட்டுநர்களுக்கு பணி காலத்தை 02.01.2023 முதல் 31.03.2023 வரை தற்காலிகமாக நீட்டிப்பு செய்துள்ளதையும், அதற்கான தோராய செலவினம் தொகை ரூ.75,000/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு-:</u>

ஒப்பந்த ஓட்டுநர்களுக்கு பணிகாலத்தை 02.01.2023 முதல் 31.03.2023 வரை தற்காலிகமாக நீட்டிப்பு செய்துள்ளதையும், அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2185/2005/எச்1)**

**தீர்மானம் எண்.335, நாள்.31.08.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**336.** திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் 930 எண்ணிக்கையில் தெருக்களும், 87.43 கி.மீ அளவில் கழிவுநீர் கால்வாய்களும் உள்ளன. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கழிவுநீர் கால்வாய் முழுவதும் மண் அடைப்பு ஏற்பட்டு நிரம்பிய நிலையில் உள்ளது. புதுப்பேட்டை ரோடு, காமராஜ் நகர், பெரியார் நகர் விரிவு வரை உள்ள கால்வாய் பெரிய நீர் கால்வாயில் இணைகிறது. மேலும், அப்துல் மாலிக் தெரு, பூரா மஜித் தெரு, புதூர் மாரியம்மன் கோயில் தெரு, வழியே வெள்ளக் கால்வாயில் இணைகிறது. கோவிலூர் ரோடு, கலைஞர் நகர், பாரதி ரோடு, சாமியார் கொட்டாய்,சந்திரன் நகர்,அவ்வைநகர், இந்திரா நகர், பா.ஊ.சா.நகர், பசுமை நகர், சின்னக்குளம் மாரியம்மன் கோயில் தெரு, செட்டித் தெரு, அண்ணா நகர், கௌதம்பேட்டை, கச்சேரித் தெரு. ஆரிப்நகர் ,எல்லையம்மன் கோயில் தெரு ஆகிய தெரு உள்ளிட்ட பகுதிகளில் கழிவுநீர் கால்வாய் நிரம்பி உள்ளது. வட கிழக்கு பருவமழை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கழிவுநீர் கால்வாய்களை போர்கால அடிப்படையில் JCB இயந்திரம், மினி ஹிட்டாச்சி, டிராக்டர் இயந்திரங்கள் உதவியுடன் தூர்வாரி அப்புறப்படுத்தும் பணிகளை ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கொள்ளவும், அதற்குரிய தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

பொது சுகாதாரப் பணிகளின் அவசியத்தினை கருதி, இந்நகராட்சி கழிவுநீர் கால்வாய்களை தூர்வாரும் பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1184 /2023/எச்1)**

**தீர்மானம் எண்.336, நாள்.31.08.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**337.** திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கழிவுகளை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு பயன்படுத்தும் வாகன உரிமையாளர்கள் நகராட்சி அலுவலகத்தில் உரிய உரிமம் பெற்று பணி மேற்கொள்ள தெரிவிக்கும் விளம்பரத்தை கீழ்காணும் நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு பட்டியல் தொகை விவரம்:

| வ.எண். | தமிழ் (ம) ஆங்கில நாளிதழ் பெயர் / நாள் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1. | தினத்தந்தி–14.04.2023 | THE DAILY THANTHI TRUST, VELLORE. | 5,208.00 |
| 2. | TIRINITY MIRROR –16.06.2023 | TIRINITY MIRROR KODAMBAKKAM, CHENNAI. | 19,425.00 |
| | **மொத்தம் ரூ** | | **24,633.00** |

மேற்படி விளம்பர நிறுவனங்களுக்கு பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>
மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1420/2022/எச்1)

**தீர்மானம் எண்.337, நாள்.31.08.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**338.** திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.–12, தண்டபாணி கோயில் தெரு, வார்டு எண்–26 கௌதம்பேட்டை மற்றும் வார்டு எண்–15 சாமியார் கொட்டாய் ஆகிய பகுதிகளில் உள்ள பொது கழிப்பறைகளின் செப்டிக் டேங்க் (நச்சுத்தொட்டி) முழுவதும் நிரம்பி உள்ளதால் பொதுமக்கள் பயன்படுத்தாத இயலாத நிலையில் உள்ளது. நச்சு தொட்டிகளை சுத்தம் செய்ய இந்நகராட்சியில் வாகனம் இல்லாததால், தனியார் செப்டிக் டேங்க் கிளினிங் வாகனத்தை பயன்படுத்தி பொது கழிப்பறைகளின் நச்சு தொட்டிகளை சுத்தம் செய்யும் பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ 1.50 இலட்சத்திற்கு பொது சுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகரமன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், 15.03.2023–ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகளின் விவரம்:

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | லோடு ஒன்றுக்கு | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | வசந்த்<br>ஏர் கம்ப்ரசர் செப்டிக் டேங்க் கிளினிங்,<br>TMC காலனி, திருப்பத்தூர். | ரூ.3500.00 | குறைவு |
| 2. | தனுஷ்<br>ஏர் கம்ப்ரசர் செப்டிக் டேங்க் கிளினிங்,<br>TMC காலனி, சேலம்மெயின் ரோடு,<br>திருப்பத்தூர். | ரூ.3800.00 | அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| 3. | L. மோகன்<br>ஏர் கம்ப்ரசர் செப்டிக் டேங்க் கிளினிங்,<br>TMC காலனி, திருப்பத்தூர். | ரூ.3700.00 | அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:–</u>

மேற்படி மூன்று விலைப்புள்ளிகளில் வசந்த் ஏர்கம்ப்ரசர் செப்டிக் டேங்க்கிளினிங், TMC காலனி, திருப்பத்தூர். நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கி, அதற்கான தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.298/2023/எச்1

**தீர்மானம் எண்.338, நாள்.31.08.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**339**. திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் தினசரி திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்குப்பட்ட பகுதிகளில் உள்ள கழிவுநீர் கால்வாய்களில் கொசு மற்றும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் பணிகளுக்கு சிவசக்தி டிரேடர்ஸ், எண்.7/4, செல்லாண்டியம்மன் கோயில் தெரு, கோட்டை, நாமக்கல் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை இந்நகரமன்ற தீர்மான எண்.200, நாள்.30.12.2022–ல் அனுமதிக்கப்பட்டுள்ளதன்படி, மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. ரெடிமிக்ஸ் மருந்து இருப்பு இல்லாததால், பொது சுகாதாரப் பணிகளின் அவசியம் கருதி, ரூ.9.75 இலட்சத்திற்கு நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனம் 14.10.2022–ல் அளித்த.விலைப்புள்ளி விலை விகிதத்தின்படி, 1300 லிட்டர் ரெடிமிக்ஸ் மருந்து சப்ளை செய்ய சிவசக்தி டிரேடர்ஸ், எண்.7/4, செல்லாண்டியம்மன் கோயில் தெரு, கோட்டை, நாமக்கல் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

பொது சுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனம் 14.10.2022–ல் அளித்த விலைப்புள்ளி விலை விகிதத்தின்படி, 1300 லிட்டர் ரெடிமிக்ஸ் மருந்து சப்ளை செய்ய சிவசக்தி டிரேடர்ஸ், எண்.7/4, செல்லாண்டியம்மன் கோயில் தெரு, கோட்டை, நாமக்கல் நிறுவனத்திற்கு ரெடிமிக்ஸ் மருந்து சப்ளை செய்ய பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1208/2022/எச்1)**
**தீர்மானம் எண்.339, நாள்.31.08.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**340.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண்.K.Dis.No.30813/J3/2018 நாள்.11.12.2018–ல் ஒப்பந்த பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி, இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள V.K.காண்ட்ராக்டர்ஸ், எண்.23, சோலம்பேடு மெயின் ரோடு, கிருஷ்ணாபுரம், அம்பத்தூர், சென்னை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி உத்தரவுபடி, ஒரு வருட ஒப்பந்த காலம் 28.02.2020–ல் முடிவடைந்துவிட்டதால், பொது சுகாதார பணிகளின் அவசியம் கருதி மேற்படி பணி உத்தரவில் குறிப்பிட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் 29.02.2020 முதல் 115 தூய்மை பணியாளர்களை கொண்டு திடக்கழிவு பணிகள் மேற்கொள்ள மேற்படி நிறுவனத்திற்கு ஒப்பந்த காலத்தை நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்தகாலம் 30.04.2023–ல் முடிவடைந்துவிட்டதலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில், தெரிவித்துள்ளபடி, புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவது நடவடிக்கையில் இருந்ததாலும், பொது சுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு 01.05.2023 முதல் 30.06.2023 வரை அல்லது மறு உத்தரவு பிறப்பிக்கும் வரை இதில் எது முன்னதோ அந்த காலம் வரை பணி காலத்தை நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கியதையும், அதற்கான ஊதியம் வழங்குவதற்கான தோராய செலவினத் தொகை ரூ.26.65 இலட்சத்திற்க்கும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :–

பொது சுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று V.K.காண்ட்ராக்டர்ஸ், எண்.23, சோலம்பேடு மெயின் ரோடு, கிருஷ்ணாபுரம், அம்பத்தூர், சென்னை நிறுவனத்திற்கு மேற்படி பணி உத்தரவில் குறிப்பிட்டுள்ள ஊதிய விகிதத்தில் திடக்கழிவு பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கியதையும், அதற்கான ஊதியத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2356/2018/எச்**1)

**தீர்மானம் எண்.340, நாள்.31.08.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**341.** முதல் அமைச்சரின் காலை உணவு திட்டம் (CMBFS) திருப்பத்தூர் நகர பகுதியில் உள்ள நகராட்சி பள்ளி சுமார் 15 பள்ளிகள் உள்ளது. அப்பள்ளிகளுக்கு பேனர் ACP SHEET மற்றும் அதன் மின்புறம் ஒரு INCH M.S SQUARE பைப் மூலம் பிரேம் அமைக்கவும் மற்றும் அதற்கு வண்ணம் பூசும் வேலை மேற்கொள்ள வேண்டி உள்ளதாலும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு சிற்றுண்டி வழங்க தேவைப்படும் சுமார் 700 எண்ணிக்கையில் சிற்றுண்டி தட்டு தண்ணீர் டம்ளர், ஆகியவை வாங்க வேண்டி உள்ளது. இப்பணிக்கு 25.08.2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் மூலம் சிறப்பு விழா மேற்கொள்ள வேண்டி உள்ளதால் மேற்கண்ட பணிகளுக்கு உள்ளூர் விலைப்புள்ளி மூலம் பணி மேற்கொண்டு பணிக்கு உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சம் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:1387/2023/இ1**

**தீர்மானம் எண்.341, நாள்.31.08.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**342.** திருப்பத்தூர் நகராட்சியில் – கலைஞர் மகளிர் உரிமை திட்ட விண்ணப்ப பதிவிற்கு சாமியான பந்தல், நாற்காலி மற்றும் மேஜை வாடகை அடிப்படையில் பொருத்துதல் பணி செய்ய 03.08.2023–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் இலட்சம் | ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் |
|---|---|---|---|
| 1 | Providing Temporary Arrangements, samiyana, Panthal, chair, tables, for apply of kalaignar Magalir Urimai Thittam (KMUT) at 23 centers of school & Community Hall in Thirupathur Municipality. | 7.00 | 1) Siva Enterprises ஒப்பந்ததாரர் (0.10%) மதிப்பீட்டை விட குறைவு<br>2) TPG delors ஒப்பந்ததாரர் (0.92%) மதிப்பீட்டை விட அதிகம் |

வரிசை எண் 1ல் கண்டுள்ள பணிக்கு திரு. Siva Enterprises மதிப்பீட்டை விட 0.10% ஒப்பந்தப்புள்ளி (சதவிதம்) வழுங்கியுள்ளார். எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்க ஒப்பந்ததாரர் திரு.Siva Enterprises என்பவருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கபடுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 1047/2023/இ1**

**தீர்மானம் எண்.342, நாள்.31.08.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**343.** திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்:17யில் சேர்மன் லஷ்மணன் தெருவில் உள்ள நியாயவிலை கடைக்கு முன்புறம் தளம், GI-Sheet, கல்வெட்டு அமைக்கும் பணி மற்றும் புதுபேட்டை பகுதியில் உள்ள குடிநீர் வால்வு தொட்டின் சுவற்றை உயர்த்தி மூடு சிலாப் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்ட தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுதிக்கலாம்.

2) மேற்படி பணிக்காகும் செலவினத்தை 2023–24ஆம் நிதி ஆண்டின் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1055 /2023/இ1**

**தீர்மானம் எண்.343, நாள்.31.08.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**344.** திருப்பத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கூடுதல் கட்டிடம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டுவதற்கு 2023–2024 நிதி ஆண்டில் அனுமதி வழுங்கப்பட்டது. மேற்கண்ட பணிக்கு 15வது மானியம் சுகாதார மானியம் ஆண்டு 2023–24 தொகை ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் பார்வைக்கு ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:1303/2023/இ1**

**தீர்மானம் எண்.344, நாள்.31.08.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**345.** திருப்பத்தூர் நகராட்சியில் அண்ணாநகர் பகுதியில் 2022–23ஆம் ஆண்டிற்குண்டான புதியதாக நகர்நல ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க ரூ.120.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:35205/22/EA–2 நாள்:03.08.2023ல் நிர்வாக அனுமதி வழுங்கப்பட்டு உள்ளது. மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் பார்வைக்கு ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:1289/2023/இ1**

**தீர்மானம் எண்.345, நாள்.31.08.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**346.** திருப்பத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட மூன்று பகுதிகளில் புதியதாக நகர்புற துணை சுகாதார நிலையம் கட்டுவதற்கு இமாம் தெரு, காமராஜ் தெரு, மற்றும் சிவசக்தி நகர் ஆகிய பகுதிகளுக்கு 2023-24 நிதி ஆண்டில் ரூ.30.00 இலட்சம் விதம் ரூ.90.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்ற தகவல் மன்றத்தின் பார்வைக்கு ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 1470/2023/இ1**

**தீர்மானம் எண்.346, நாள்.31.08.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**347.** திருப்பத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த பயனாளர்களை தேர்வு செய்ய நகராட்சிக்கு சொந்தமான பள்ளிக்கூடங்கள், அங்கன்வாடி மையங்கள் அரசு பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் உட்பட 23 இடங்கள் தேர்வு செய்து உள்ளனர். மேற்கண்ட மையங்களுக்கு வரப்பெறும் பயனாளிகளுக்கும் பங்கு பெறும் பொது மக்கள் மற்றும் அலுவலர்களும் நிழல் தரும் வகையில் சாமியான பந்தல், அமருவதற்கு சேர் மற்றும் கணினி உபபொருட்களை பொருத்தி உபயோகித்திட தேவையான மேசைகளை வாடகை அடிப்படையில் 15 நாட்களுக்கு அமைத்து தர தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

(1) மன்றம் அனுமதிக்கலாம்

(2) நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(3) மேற்கண்ட பணியினை 2023-24ம் நிதியாண்டு நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:1057/2023/இ1**

**தீர்மானம் எண்.347, நாள்.31.08.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**348.** திருப்பத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் நகராட்சி பொறியாளர் நிலை–II ஆக பணிபுரிந்து வந்த திரு.வி.ஜார்ஜ் என்பவரை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.4310/2019/F1, நாள்.26.03.2019–ஆம் தேதிய உத்திரவின்படி 26.03.2019 முதல் தற்காலிக பணி நீக்கம் செய்து உத்திரவிடப்பட்டது. மேற்படி பொறியாளர் தனது பணிப்பதிவேட்டில் இருப்பில் உள்ள ஈட்டிய விடுப்பு மற்றும் சொந்த அலுவல் காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு கணக்கினை முடித்து காசாக்கி வழங்க கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு W.P.No.16750/2020–ன் மீது 22.03.2022ஆம் தேதி அன்று தீர்ப்புரை வழங்கப்பட்டதை தொடர்ந்து அரசு வழக்கறிஞர், மேற்படி தீர்ப்புரை குறித்து சட்டக் கருத்துரை வழங்க கோரியதின்பேரில், சட்டக் கருத்துரை வழங்கியதற்கான அரசு வழக்கறிஞர், கட்டணம் தொகை ரூ.5,000/– வழங்க கோரியுள்ளதால், மேற்கண்ட தொகையை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அனுதிக்கலாம்.

**(ந.க.எண்.0969/2019/சி1)**

**தீர்மானம் எண்.348, நாள்.31.08.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**349.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.12091/2023/எம்ஏ2, நாள்.09.08.2023–ஆம் தேதிய கடிதத்தில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்(திருத்தம்) சட்டம்,2022 மற்றும் விதிகள் 2023– பயிலரங்கம் 22.06.2023 அன்று கலைவாணர் அரங்கில் நடத்தப்பட்டதற்கான வாடகை, மேடை அலங்காரம், சிற்றுண்டி மற்றும் உணவு வழங்கப்பட்டமைக்கான தேர்வுநிலை நகராட்சிகளுக்கு தொகை ரூ.15,000/–ஐ நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் ICIC வங்கி, சாந்தோம் கிளை, கணக்கு எண்.343201000090 IFSC code : ICIC0003432 என்ற வங்கி கணக்கில் ECS முறையில் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளதால், திருப்பத்தூர் நகராட்சி பங்கு தொகையை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>
அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.214/2014/சி1)**

**தீர்மானம் எண்.349, நாள்.31.08.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

ஆணையாளர்,
திருப்பத்தூர் நகராட்சி.